Crl.Misc.39

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.78/2019

**P.W**.4

| | |
|---|---|
| Name | : திரு.ராஜமாணிக்கம் |
| Father/Husband Name | : திரு.வரதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாயலூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 7 செல்லதுரையை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம்என்னுடையது தான். 2017ம் ஆண்டு ஒரு நாள் காரைத்திட்டு என்ற இடத்தில் சண்டை நடந்தது. நான் அச்சமயம் அங்கு வந்தேன். அப்போது சட்ராஸ் போலிசார் அந்தஇடத்தில் இருந்தார்கள். சம்பவ இடத்தில் விசாரணை செய்து மேற்படி கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

என்னிடம் காட்டப்படம் பார்வை மகசரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து தான் மேற்கண்ட கையெழுத்தை போட்டேனா என்றால் இல்லை.

**நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Crl.Misc.39

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.78/2019

**P.W**.5

| | |
|---|---|
| Name | : **திரு.செல்லதுரை** |
| Father/Husband Name | : திரு.லஷ்மணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாயலூரில் குடியிருந்து மின்சார வாரியத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.4 ராஜமாணிக்கத்தை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள் காரைத்திட்டில் அன்பழகன் வீட்டு அருகே சண்டை நடந்தது. நான் சென்று பார்த்தபோது போலிசார் சம்பவ இடத்தில்இருந்தார்கள். சம்பவ இடத்தில் விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் போட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றதாக சொல்லும் ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அ.த.சா.2 பார்வை மகசரில் உள்ள என்னுடைய கையெழுத்தை நான் காவல்

நிலையத்தில் வைத்து தான் போட்டேன். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.